**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 76/2015**

**Deposition of Witness for : PW 11**

| | |
|---|---|
| **Name** | : திருமதி. கலைமகள் |
| **Father Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22-12-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது அரசினர் மருத்துவமனை கரூரில் ஸ்டாப் நர்ஸ் ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.08.2013ல் தீர்த்தமலை ஆரம்ப சுகாதார மையத்தில் செவிலியராக இரவு பணியில் இருந்த போது சுமார் 11.30 மணியளவில் சக்திவேல் என்ற நபர் தனக்கு வயிறு வலிப்பதாக கூறி சிகிச்சைக்காக வந்தவரை புறநோயாளி பதிவேட்டில் வரிசை எண் 17, மருத்துவமனை எண் 26668 பதிவு செய்து வயிற்று வலிக்காக டைசைக்லோமின் மருந்தை ஊசியின் மூலம் செலுத்தி அனுப்பி வைத்தேன். அதன் பிறகு நான் சிகிச்சை அளித்த நபர் மறுநாள் மேல் சிகிச்சைக்கா அரூர் அரசு மருத்துவமனைக்கு சென்றும், பின்னர் தர்மபுரி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றும், சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

அவர் என்ன உபாதைக்காக இறந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. அவர் என்ன சிகிச்சைக்காக தர்மபுரி சென்றார் என்ற விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது.

ஒம்/- கலைமகள்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.